பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 11 வெள்ளிக்கிழமை (23.02.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 90

போர் நிறுத்த ஒப்பந்த ஐந்தாண்டு நிறைவு குறித்து விடுதலைப் புலிகள் அறிக்கை

தமிழ் மக்களின் இறைமை, சுயநிர்ணய உரிமையை மறுக்கும் சர்வதேசத்தின் நிலைப்பாடு விசனம் அளிக்கிறது

அரசாங்கம் முன்னெடுக்கும் போரால் தமிழர்களை அடிமைப்படுத்த முடியாது

கிளிநொச்சி, பெப்ரவரி.23

★ சிறிலங்காவின் இறைமையையும் நில ஒருமைப்பாட்டையும் காரணம் காட்டி, தமிழர் தாயகத்தின் இறைமையையும் சுயநிர்ணய உரிமையையும் மறுக்கும் சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடானது தமிழ் மக்களை விசனமடையச் செய்துள்ளது.

★ பயங்கரவாதத்துக்கு எதிரான போரெனக் கூறிக்கொண்டு, சிறிலங்கா அரசாங்கம் தற்போது மேற்கொண்டு வரும் போர், தமிழ் மக்களை ஒருபோதும் அடிமைப்படுத்தி விடாது.

★ எமது மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கு மாத்திரமே தீர்வுகாணும் நோக்கில் உருவாக்கப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையைக் கூட, முழுமையாக நடைமுறைப்படுத்தாது நிராகரிக்கப்பட்டுள்ளமை சமாதான முன்னெடுப்புத் தொடர்பான எமது மக்களின் நம்பிக்கையையும் எதிர்பார்ப்புகளையும் சிதைத்துள்ளது.

இவ்வாறு போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி நேற்று ஐந்து வருடங்கள் பூர்த்தியாவது குறித்து, தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றிரவு விடுக்கப்பட்ட அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

(03ஆம் பக்கம் பார்க்க)

பிக்குகள் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, பெப். 23

போர்நிறுத்த உடன்படிக்கையை ரத்துச் செய்யக்கோரி தேசிய பிக்குகள் முன்னணி நேற்று எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தியது.

கொழும்பு ஹைட்பார்க் மைதானத்தில் ஒன்று திரண்ட பிக்குகள் ஒப்பந்தத்திற்கு எதிராக கோஷமிட்டனர். அங்கு கூட்டம் ஒன்றையும் அவர்கள் நடத்தினர்.

(04 ஆம் பக்கம் பார்க்க)

வவுனியாவில் 3 சடலங்கள்

வவுனியா, பெப்.23

வவுனியாவில் சுட்டுக் கொலைசெய்யப்பட்ட மூவரின் சடலங்கள் நேற்றுக் காலை கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

வவுனியா உக்குளாங்குளம்- திருச்செந்தூர் மில் சந்தியில் இனம் தெரியாத நபர்களினால் இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். கொல்லப்பட்டவர் 28 வயதான

(04 ஆம் பக்கம் பார்க்க)

போர்நிறுத்த உடன்பாடு தொடர்பாக அரசின் முடிவு ஓரிரு தினங்களில்!

கொழும்பு, பெப். 23

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர்வதா அல்லது அதைக் கைவிடுவதா என்பது குறித்து அரசு சில தினங்களில் அறிவிக்கும்.- இவ்வாறு நேற்று தகவல் வெளியிட்டார் தகவல், ஊடகத்துறை அமைச்சர் அனுரா பிரியதர்ஷன யாப்பா.

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் வாராந்த செய்தியாளர் கூட்டம் நேற்று தகவல் திணைக்களத்தில் நடைபெற்றபோதே அங்கு வைத்து இத்தகவலை அவர் வெளியிட்டார். இவ் விடயம் குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்தம் ஒன்று ஐந்து வருடம் நீடிப்பதன் காரணமாக அது தனிநாடு பிறக்க வழி செய்துவிடும் என்று கூறுவதில் அர்த்தமில்லை. அப்படி ஏதும் இல்லை.

(04 ஆம் பக்கம் பார்க்க)

நாடாளுமன்றில் ஜே.வி.பியினர் பெரும் ரகளை செங்கோலைத் தூக்கிக்கொண்டு ஓட்டம்!

கொழும்பு, பெப்.23

ரணில் - பிரபா - யுத்தநிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை உடனடியாக ரத்துச் செய்ய வேண்டும் எனக்கோரி ஜே.வி.பியினர் நாடாளுமன்றத்தின் நடுவே நேற்று ஆர்ப்பாட்டம் செய்தனர். இதனால் சபை நடவடிக்கைகள் ஸ்தம்பித்தன. இந்தச் சந்தர்ப்பத்தில் ஜே.வி.பி. உறுப்பினர் ஒருவர் செங்கோலைத்தூக்கிக்கொண்டு சபைக்கு வெளியே ஓட்டம் பிடித்தார்.

ஜே.வி.பியின் திருமலை மாவட்ட உறுப்பினரான ஜயந்த வீரசேகரவே செங்கோலைத் தூக்கிக்கொண்டு சபைக்கு வெளியே ஓடினார். படைக்கல சேவிதரும் உதவியாளர்களும் அவரைப் பின்னால் துரத்திச் சென்று செங்கோலை அவரிடமிருந்து பறித்து வந்து சபா பீடத்தில் வைத்தனர்.

நாடாளுமன்றத்தில் அமைதியான போராட்டங்களை நடத்தலாம். ஆனால், பயங்கரவாதத்தை அனுமதிக்க முடியாது

(01 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் போக்குவரத்து இடைஞ்சல் இன்றி நடைபெற ஏற்பாடு செய்வதாக உறுதிமொழி

யாழ்.நீதிபதிக்கு தளபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.23

குடாநாட்டில் பிரதான போக்குவரத்துப் பாதைகளான பலாலி மற்றும் ஏ-9வீதி ஊடான போக்குவரத்தில் மக்கள் எதிர்நோக்கும் இடைஞ்சல்களைத் தவிர்க்க நடவடிக்கை எடுப்பதாக யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி உறுதி அளித்துள்ளார்.

யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜாவுக்கே படைத்தளபதி இந்த உறுதிமொழியை நேற்று மாலை தெரிவித்தார்.

பிரதான பாதைகள் ஊடான போக்குவரத்துக்கள் பல மணிநேரம் தடைசெய்யப்படுவதால் அரச ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள், தனியார் கல்வி நிலைய மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் தமது தேவைகளை வேண்டிய நேரத்தில் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் உள்ளனர் என்றும் -

அவர்கள் வழமையான பணிகளை மேற்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் - யாழ்.நீதிபதி இ.த.விக்னராஜா தளபதியிடம் கேட்டிருந்தார்.

(04 ஆம் பக்கம் பார்க்க)

இறம்பைக்குளம் மகாவித்தியாலயத்தில் வெடிகுண்டுப் புரளியால் பதற்றம்

வவுனியா, பெப். 23

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தில் வெடிகுண்டு இருப்பதாகப் பரவிய வதந்தியால் அங்கு பெரும் அல்லோலகல்லோலம் ஏற்பட்டது. நேற்று நண்பகல் வேளை இந்தக் குண்டுப்புரளி காரணமாக மாணவர்கள் பெரும் கலவரமடைந்து வெளியே ஓட்டம் எடுத்தனர். மாணவர்களை வீட்டுக்கு அழைத்துச் செல்வதற்காகப் பெற்றோர்களும் பதறியடித்துக்கொண்டு பாடசாலை நோக்கிப் படையெடுத்தனர். பாடசாலையின் விஞ்ஞான ஆய்வுகூடத்தினுள் வெடிகுண்டு இருப்பதாக அநாமதேய தொலைபேசி அழைப்பு மூலம் தெரிவிக்கப்பட்டதை அடுத்தே அங்கு இந்தக் களேபரம் ஏற்பட்டது. தகவல் அறிந்த வவுனியா நீதிவான் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் உடனடியாகப் பாடசாலைக்குச் சென்றார். படையினருடன் இணைந்து பொலிஸார் அங்கு தேடுதல் நடத்தினர். எனினும், வெடிகுண்டு எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. (க-161)

தெல்லிப்பழையில் புனர்வாழ்வு முகாம்: பாதுகாப்பு வழங்க முடியாத நிலை

படைகளின் தளபதி பொலிஸாருடாக யாழ்.நீதிமன்றுக்கு அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.23

குடாநாட்டில் உயிர் அச்சுறுத்தல் காரணமாக தஞ்சம் அடைந்தவர்களைத் தங்க வைப்பதற்கு தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையத்தை இயக்குவதற்குப் பாதுகாப்பு வழங்க முடியாது என்று யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி பொலிஸார் ஊடாக தெரியப்படுத்தியுள்ளார்.

உயிர் அச்சுறுத்தல் காரணமாக நீதிமன்றத்தில் தஞ்சம் அடைந்தவர்களை தெல்லிப்

(04 ஆம் பக்கம் பார்க்க)

எந்த வருட குடிசன மதிப்பீட்டின் அடிப்படையில் தெரிவு

மருத்துவத்துறை மாணவர் அனுமதி: மாவட்ட கோட்டா குறைந்தது ஏன்?

யாழ்ப்பாணம், பெப்.23

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து இம்முறை மருத்துவத்துறைக்கு உரிய எண்ணிக்கையில் மாணவர்கள் தெரிவு செய்யப்படாமை குறித்து மாணவர்கள், பெற்றோர்கள், கல்லூரி அதிபர்கள் மற்றும் கல்விமான்கள் பெரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இம்முறை மருத்துவத்துறைக்கு தேசிய ரீதியாக அதிக மாணவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்ட போதிலும், யாழ்ப்பாணத்துக்கு மாவட்டக் கோட்டாவுக்கு உரிய எண்ணிக்கை கிடைக்கவில்லை.

அகில இலங்கை ரீதியில் மாவட்டக் கோட்டா முறையில் மருத்துவத்துறைக்கு 1208 மாணவர்கள் உள்வாங்கப்படுகின்றனர். அந்த வகையில் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து 40 பேர் தெரிவாகி இருக்க வேண்டும். ஆனால் 30 பேர் மட்டுமே

(04 ஆம் பக்கம் பார்க்க)

திருகோணமலையில் பெண் உட்பட மூவர் சுட்டுக்கொலை!

திருகோணமலை, பெப்.23

திருகோணமலை நகரில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்களில் பெண் ஒருவர் உட்பட மூவர் கொல்லப்பட்டுள்ளனர்.

திருகோணமலை - தம்பலகாமம் - பொற்கேணிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 7.00 மணியளவில் தமிழ்க் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு கொலைசெய்யப்பட்ட

(04 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கொக்குவில் மேற்கு சி.சி.த.க.
பாடசாலை மாணவன்

செல்வன் லி.நிதராசன்

2006 ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 153 புள்ளிகள் பெற்று சித்தியடைந்தமைக்கு வாழ்த்தும் அதே வேளை, தனது 11ஆவது பிறந்தநாளை இன்று (23.02.2007) வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை அம்மா, அப்பா, தம்பி, உறவினர்கள் அனைவரும் நீடூழி காலம் வாழ்க என வாழ்த்துகின்றனர்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு. (58402) - குடும்பத்தினர்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

நேற்றுமுன்தினம் வெளியாகிய வெட்டுப்புள்ளியின்
அடிப்படையில்
யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம்
பாடசாலையில் இருந்து 40 மாணவர்கள்
பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

விஞ்ஞானப்பிரிவு	
1) மருத்துவம்	02
2) விவசாயம்	02
3) உணவும் போசனையும்	01
4) கணனி விஞ்ஞானம்	01
5) உயிரியல் விஞ்ஞானம்	01

கலைப் பிரிவு	
1) கலை I	16
2) கலை II	06
3) நுண்கலை	08

வர்த்தகப் பிரிவு	
1) முகாமைத்துவம் I	02
2) முகாமைத்துவம் II	01

இவர்கள் அனைவரையும்
இதற்கு வழிகாட்டிகளாக
இருந்த அதிபர்கள்,
ஆசிரியர்களையும் பாராட்டி
வாழ்த்தி மகிழ்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவிகள்,
(சி/58401) யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம்.

நீங்காத நினைவுகளில்

மூன்றாம் ஆண்டு *ஏழாம் ஆண்டு*

அமரர் ஆ.கதிரவேல் (J.P., ஓய்வுபெற்ற அதிபர்)

திருமதி தனலக்குமி கதிரவேல்

திதி: 23.03.2007

ஆண்டுகள் எத்தனை சென்றாலும் எம் நெஞ்சங்களில் இன்னும்
நீங்கள் வாழ்ந்துகொண்டே இருக்கின்றீர்கள்.
என்றும் உங்கள் நினைவில்.....

(58385)

"இலக்குமி இல்லம்"
அல்வாய் தெற்கு, அல்வாய்.

ச.ஶ்ரீதரன்
குடும்பத்தினர்.

கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளராகக்
கடமையாற்றும்
திருமதி ஐ. ஜெயபூரணி
அவர்களின் அன்புத் தந்தை

அமரர் செல்லையா தங்கராஜா

அவர்களின் மறைவையிட்டு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலாளரும் அனைத்து உத்தியோகத்தர்களும்,
நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.

மரண அறிவித்தல்

செல்லையா பாக்கியம்

பெருமாள் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் 6/1, பழம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பாக்கியம் (21.02.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் மகாலெட்சுமியின் அன்புத் தாயும் காலஞ்சென்ற யோகராசாவின் அன்பு மாமியும் மஞ்சுளவள்ளி, சௌந்தரராஜன், சியாமளா, சசிகலா (ஜேர்மனி), சிறிதரன் (யாழ்.போதனா வைத்தியசாலை), நிர்மலா (நியூசிலாந்து), வத்சலா (ஜேர்மனி), அருந்தவராசா, தருமராசா (ஜேர்மனி), புஸ்பாஞ்சலி, தயானந்தம் (நியூசிலாந்து), புஸ்பராஜன் (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியும் வித்தியா, சம்ஷிகா, கரிஸ், சந்தோஸிகா, பிரகீன், சௌபர்னிகா, ரிஸிதரன், ரிஸ்மிகா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.02.2007) வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

6/1, பழம் றோட்,
கந்தர்மடம். (58399)

தகவல்
யோகராசா குடும்[illegible]

வயல் விழா

ஐ.நா. அபிவிருத்தித் திட்ட நிறுவன அனுசரணையுடன் உடுவில் விவசாயப் போதனாசிரியர் பிரிவில் குரக்கன் செய்கை ஊக்குவிப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இது தொடர்பான வயல் விழா நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு குப்பிளான் விவசாய சம்மேளன அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. (1)

போட்டிப் பரீட்சை வகுப்புகள்

★ பொது உளச்சார்பு ★ பொது அறிவு
ஆசிரியர் - த.தவசேகர் சனி, ஞாயிறு 11-2

D.M.I ஆரியகுளம் சந்தி

விற்பனைக்கு

Monitor, Casing ஏனைய கணனி
உபகரணங்கள் விற்பனைக்குண்டு.
24.02, 25.02.2007 ஆம் திகதிகளில் பார்வையிடலாம்
தொடர்பு: 44/3A, மணல்தறை லேன், கந்தர்மடம்.

தவறிவிட்டது

தர்மகுலசிங்கம் கிருஷாந் என்பவருடைய NIC No. 881673428 V, விசேட அடையாள அட்டை, பாடசாலை அடையாள அட்டை என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

S.அகிலன், 205/2 கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (58398)

தவறிவிட்டது

இராசா சந்திரலேகா என்பவருடைய தே.அ. அட்டை, வி.அ.அட்டை என்பன புன்னாலைக் கட்டுவன் சந்திக்கும் உரும்பிராய்க்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் உரும்பிராய் Kids Park இல் (சிறுவர் ஆங்கிலப் பாடசாலையில்) ஒப்படைத்துதவவும் (58392)

முறைசாராக் கல்விப் பயிற்சி நெறி - 2007

எமது கல்லூரியில் முறைசாராப் பிரிவின் கீழ் கணனிப் பயிற்சிநெறி எதிர்வரும் 01.03.2007 ஆம் திகதியன்று ஆரம்பகமாகவுள்ளது. விண்ணப்பிக்க விரும்புவோர் கல்லூரி அதிபருடன் தொடர்புகொள்ளவும்.

யா/வட்டு இந்து நவோதய கல்லூரி,
சித்தன்கேணி. (#/52079)

சலுகை விலையில் கணினி

சகல விதமான கணினி உதிரிப்பாகங்களையும் P4 கணினிகள்(புதியது) மற்றும் Antivirus Updateகளையும் பெற்றுக்கொள்ளலாம். மேலும் 512 MB, 1GB, 2GB Flash Driveகளை மிக மலிவாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
512 MB - 2200, 1GB - 3200, 2GB - 4500

SPEED IT NET
72/28, பணிக்கர் லேன், திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 4591871, 0777 563213

தினசரி விமானசேவை

கொழும்பு -யாழ்.
யாழ். -கொழும்பு
DAYA AVIATION நிறுவனத்தினால்
நான்கு பேர் பயணிக்கக்கூடிய இரு
வழிப்பாதை தினசரி சிறுவிமான சேவை
உத்தரவாதத்துடன் நடத்தப்படுகின்றது.
ஒரு வழிப்பாதைக்கான கட்டணம்
ரூபா 30,000/=
உடனடிப்பயணத்துக்கு
தொடர்பு கொள்ளவும்.

தொ.பே.: 0114969116/ 0114542190
பக்ஸ்: 0114542360
மொபைல்: 0773846681

அளவையியல்
பிரத்தியேக வகுப்புகள்
நடைபெறுகின்றன
2007,2008, 2009
DAY வகுப்புகள்
ஆசிரியர் : M.Kajen
T.P. 0212229783, 0779790840
முகவரி :
105, செம். பெனடிக்ற்
றோட், நல்லூர்,
யாழ்ப்பாணம்.

ஒத்துமாறல்

மாகாண
கணக்காய்வு
அலுவலகம்,
வவுனியாவில்
கடமையாற்றும்
நிகழ்ச்சித் திட்ட
உதவியாளர்(நிதி)
யாழ்.
மாவட்டத்தில்
கடமையாற்றும்
அதே பதவி
உடையவருடன்
ஒத்துமாற
விரும்புகிறார்.
தொடர்பு:
[illegible]

துயர் பகிர்வு

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி ஶ்ரீசாந்தினி மனோகரதாஸ்
அவர்களின் பாசமிகு தந்தை

அமரர் கந்தையா நல்லதம்பி

அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினர் மற்றும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்திக்கின்றோம்.

யாழ்.மத்திய கல்லூரி. ஆசிரிய வட்டம்.

கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர்
கு.மோகன்
அவர்களின் அன்புப் புதல்வன்

செல்வன் மோ. கமலன்

அவர்களின் திடீர் மறைவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பழைய மாணவர்கள்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி (A/L 2001),
பொறியியல் பீடம் (2002/2003),
மொரட்டுவைப் பல்கலைக்கழகம்.
(சி-52088)

முதலாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
சின்னையா சின்னத்தம்பி

மோட்டாக 05.01.1932
சருகாக 06.03.2006

திதி:ஸப்தமி 23.02.2007

ஆண்டு ஒன்று ஓடிமறைந்தாலும்
ஆறிடுமோ எம்துயரம் அப்பா!
கனிவுடன் பிறர்க்கு பணிபுரிவோம்
என வாழ்ந்து காட்டியவரே!
நெஞ்சம் விட்டகலா நினைவுடன் - நாம்
அல்லும் பகலும் ஈரவிழிகளுடன்........
இன்றுடன் ஓராண்டு ஆனாலும் ஆறாது எம்துயரம்
நீங்காது உங்கள் நினைவுகள் - கள்ளமற்ற
உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

உடுவில் மேற்கு, சுன்னாகம். (58390) - குடும்பத்தினர்.

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
தம்பிப்பிள்ளை வேலுப்பிள்ளை

(முன்னாள் அதிபர், பிரசித்த நொத்தாரிசு, T.V. மாஸ்ரர், நீர்வேலி)

சமூகத்துக்காக வாழ்ந்த செம்மல், சமதர்மக் கொள்கை வாதி, நீர்வேலிக்கோர் சேவகன், கடமை வீரன் நீண்ட பயணம் மேற்கொண்டு ஈராண்டுகள் நிறையுறும் இந்நாளில் அவரது நிழலடிகளைத் தொட்டு வணங்கிடும்

நீர்வேலி மத்தி,
நீர்வேலி. (58272)

அன்பு மனைவி,
பிள்ளைகள், உறவுகள்.

---

60 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு
05
07
1945

உதிர்வு
26
12
2006

அமரர் வே.மு.இராசையா (V.M.R)

கடந்த 26.12.2006 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் வே.மு.இராசையா அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (23.02.2007) வெள்ளிக்கிழமை காலை 6.30 மணியளவில் திருநாவலூர் தெணியம்பாள் ஆலய அந்தியேட்டி மடத்தில் இடம்பெறவுள்ளதால் அந்நிகழ்விலும் அதைத்தொடர்ந்து அன்னாரின் மந்திகை இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

[illegible] மந்திகை. (58350)

தகவல் :
குடும்பத்தினர்.

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

அமைதித் தீர்வா? இராணுவத் தீர்வா? தெற்கே தீர்மானிக்க வேண்டும்

"நாட்டின் இறைமைக்கும் அதன் தேசியப் பாதுகாப்பிற்கும் ஆபத்து ஏற்படுமாக இருந்தால் யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டிய அவசியம் அரசுக்குக் கிடையாது. முழு நாட்டையும் மக்களையும் விட எந்த ஓர் ஒப்பந்தமும் பெரிதல்ல."

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் அரசின் பாதுகாப்புத்துறைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்தநிறுத்தத்துக்கு வழிசெய்த புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு ஐந்து வருடம் பூர்த்தியாகும் நிலையில், அந்த ஒப்பந்தத்திலிருந்து இலங்கை அரசுத் தரப்பை வெளியேறக் கோரும் தென்னிலங்கை பௌத்த - சிங்களப் பேரினவாதிகளின் கூச்சல் இப்போது மேலும் தீவிரமடைந்திருக்கின்றது.

இந்த ஒப்பந்தத்திற்கு எதிரான தென்னிலங்கைத் தீவிரவாதிகளின் எரிச்சல் நாடாளுமன்றத்துக்குள்ளும் நேற்று எதிரொலித்தது. 'நாடாளுமன்றத்துக்குள் பயங்கரவாதம்' என்று விசனத்துடன் சினந்து சபாநாயகர் குறிப்பிடும் அளவுக்கு நிலைமை சென்றுள்ளது.

'இந்த எதிர்ப்புகளுக்கு மத்தியிலேயே முழு நாட்டையும், மக்களையும் விட யுத்தநிறுத்த உடன்படிக்கை பெரிதல்ல' - என்பதை அரசின் கருத்தாகத் தெரிவித்திருக்கின்றார் பாதுகாப்புத் துறைப் பேச்சாளர்.

இதேசமயம் -

இலங்கையில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்றால் யுத்த நிறுத்த ஒப்பந்தம் பாதுக்காக்கப்படுவதும் அது முழு அளவில் நடைமுறைப்படுத்தப்படுவதும் அவசியம் என்று அமைதி முயற்சிகளுக்கு அனுசரணைப்பணி வகிக்கும் நோர்வேயின் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் தெரிவித்திருக்கின்றார்.

இலங்கைக்கு உதவி வழங்கும் டோக்கியோ மாநாட்டின் இணைத்தலைமைகளான அமெரிக்கா, ஜப்பான், நோர்வே மற்றும் ஐரோப்பிய நாடுகளின் ஒன்றியம் ஆகியவை உட்பட சர்வதேச சமூகத்தின் கருத்தும் நிலைப்பாடும் கூட அதுவே. நோர்வேத் தூதரும் ஏனைய மற்றைய நாடுகளின் கொழும்புப் பிரதிநிதிகளும் அதனையே மீள வற்புறுத்தியிருக்கின்றார்கள்.

இலங்கை அரசு அமைதிவழித் தீர்வை உண்மையிலேயே விரும்புமானால் யுத்தநிறுத்த உடன்பாடு சொல்லிலும், செயலிலும் முழு அளவில் நடை முறைப்படுத்தப்பட வேண்டும் என்பதே தமிழர் தரப்பின் - அவர்களின் ஏக, அதிகாரபூர்வ பிரதிநிதிகளான புலிகள் தரப்பின் - நிலைப்பாடாகவும் ஒரே முடிவாகவும் இருக்கின்றது என்பதும் தெளிவு.

ஆக, சம்பந்தப்பட்ட தரப்புகள் உட்பட சர்வதேச சமூகத்தின் ஒரே குரலான நிலைப்பாடும் யுத்த நிறுத்தத்துக்கு வழிசெய்யும் யுத்தநிறுத்த உடன் பாடு பேணிப்பாதுகாத்து முழு அளவில் நடை முறைப்படுத்தப்பட வேண்டும் என்பதே.

ஆனால், சம்பந்தப்பட்ட இரு தரப்புகளில் ஒன்றான இலங்கை அரசுப்பக்கத்தில் தான் சிங்கள - பௌத்த தீவிரப் போக்காளர்களின் சிந்தனையும், எண்ணமும்,விருப்பமும் இதற்கு மாறாக இருக்கின்றது.

தனது 'வாக்கு வங்கி'யைத் தக்கவைக்கும் இலக் கோடு இந்தப் பெரும்பான்மை இனவாதப் போக் குடைய தென்னிலங்கை சக்திகளுக்கு வழமை யாக இணங்கிப் போகும் கொழும்பு அரசுத் தலைமை, இந்த விடயத்தில் எப்படி நடந்து கொள்ளப் போகின்றது என்பதே இன்றைய கேள்வியாகும்.

தென்னிலங்கைப் பேரினவாதப் பூதத்தின் அழுத்தத்துக்கு நசிந்து கொடுத்து யுத்தநிறுத்த உடன்பாட்டை அரசு முறித்துக் கொள்ளுமா? அல்லது அவர்களின் இனவாதச் சிந்தனையில் எழுந்த இந்தக் கோரிக்கையை உதாசீனம் செய்துவிட்டு அமைதி முயற்சிகளில் முழு ஈடுபாடு காட்டுமா? அல்லது அதையும் விடுத்து, சர்வதேச சமூகத்தைச் சமாளிப்பதற்காக யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதாக - தற்போது செய்வது போன்று - வெளியில் கூறிக்கொண்டு, அதே சமயம் தென்னிலங்கையைத் திருப்திப்படுத்தும் வகையில் ஒரு நிழல் யுத்தத்தை புலிகள் மீது கட்டவிழ்த்து, யுத்த நிறுத் தம் நடைமுறையில் செத்துச் செயலிழப்பதைத் தனது கைவரிசையாகத் தொடருமா?

அரசு என்ன முடிவு எடுக்கப்போகின்றது என்பதில்தான் யுத்தநிறுத்த உடன்பாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது.

முழு நாட்டையும் - முழு இலங்கைத் தீவையும் - பேரழிவிலிருந்து காப்பாற்ற வேண்டுமானால் எந்நேரத்திலும் பெரிய எடுப்பில் வெடிக்கக்கூடிய நிலையில் இருக்கும் இந்தக் கொடூர யுத்தத்தை நிறுத்தி இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைக் காணவேண்டும்.

யுத்தநிறுத்தத்தைப் பேணி, அமைதி முயற்சிகளை முன்னெடுத்து, சமாதான இணக்கப்பாடு ஒன்றைக் காண்பதன் மூலம் நிரந்தரத் தீர்வை எட்டுவதா? அல்லது யுத்த நிறுத்த உடன்பாட்டை முறித்து, இராணுவ வழி நடவடிக்கைகளை முன் னெடுத்து, படைச் செயற்பாடுகள் மூலம் நிரந்தரத்தீர்வை எட்டுவதா?

எது செய்யக்கூடியது, சாத்தியப்படக்கூடியது, யதார்த்த பூர்வமானது என்பதைத் தீர் மானித்து முடிவு எடுக்க வேண்டியது இலங்கை அரசுத் தரப்புத்தான்.

இலக்கு அல்லது நியாயத்தீர்வு அமைதி முறையில் - சமாதான வழித்தடத்தில் - எட்டப்படுமானால் அது தமிழருக்கு மகிழ்ச்சி தரக்கூடியது. இல்லை, பேரழிவையும் சந்தித்துத்தான் இலக்கை எட்டவேண்டுமானால் அதை எதிர்கொள்ளவும் தமிழர் தரப்புத் தயங்கமுடியாது.

எந்த வழித் தீர்வு என்பதைத் தென்னிலங்கைச் சிங்களம்தான் தீர்மானிக்க வேண்டும்.

முக்கிய வீதிகள் தடை செய்யப்படுவதால் மக்கள் போக்குவரத்துக்கு இடைஞ்சல்

யாழ்ப்பாணம், பெப்.23

குடாநாட்டின் முக்கிய வீதிகள் அடிக்கடி பொதுமக்களின் போக்குவரத்துக்குத்தடை செய்யப்படுவதால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். தங்கள் நாளாந்த தேவைகளை மேற்கொள்வதில் பாதிப்படைவதாகவும், உரிய நேரத்தில் செய்து முடிக்க இயலாத இடைஞ்சல் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மிக முக்கிய வீதிகளான போக்குவரத்து அதிகமுள்ள பலாலி வீதி, ஏ-9 கண்டிவீதி ஆகியவற்றில் அடிக்கடி பொது மக்களின் போக்குவரத்துக்குப் படையினர் தடை விதிக்கின்றனர். இராணுவ வாகனங்களின் வருகைக்காகவே இவ்வாறு போக்குவரத்துத் தடை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மூன்று தினங்களாகத் தொடர்ந்து காலை வேளையிலும் மாலை வேளைகளிலும் சில சந்தர்ப்பத்தில் நண்பகலிலும் இந்த வீதிகளில் போக்குவரத்துக்குத் தடை ஏற்படுத்தப்படுகின்றது.

சுமார் இரண்டு, மூன்று மணித்தியாலங்கள் இந்த வீதித் தடை ஏற்படுத்தப்படுவதால் போக்குவரத்தில் ஈடுபடுவோர் நீண்ட நேரம் கடும் வெயிலில் வீதிகளில் கால்கடுக்க நிற்பதைக் காணமுடிகின்றது.

இந்த வீதித்தடை காரணமாக மக்களின் அன்றாட நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாக மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். முக்கிய அரச அலுவலகங்கள், வங்கிகள், வைத்தியசாலைகள் ஆகியவற்றுக்குச் செல்ல வேண்டிய மக்கள் உரிய வேளைகளில் அங்கு சமுகமளிக்க முடியாத நிலை ஏற்படுகின்றது.

சிலவேளைகளில் மாலை வேளைகளில் ஏற்படுத்தப்படும் வீதித்தடைகள் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படும் நேரத்தை அண்டியதாகவே அகற்றப்படுவதாகவும் இதனால் தாம் ஊரடங்கு நேரத்திலேயே வீடு திரும்ப வேண்டிய இக்கட்டான நிலையும் ஏற்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.(அ-4-8-51)

யாழ்.பல்கலைக்கழக மாணவர் விரிவுரைகளுக்குச் சமுகமளித்தனர்

யாழ்ப்பாணம், பெப்.23

யாழ்.பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகள் நேற்று வியாழக்கிழமை வழமை போன்று முழு அளவில் நடைபெற்றன. ஆறுமாத கால இடைவெளிக்குப் பின்னர் மாணவர்கள் முழு அளவில் நேற்று விரிவுரைகளுக்கும் ஏனைய கல்விச் செயற்பாடுகளுக்குச் சமுகமளித்தனர்.

குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரணசூழ்நிலை காரணமாக கடந்த 6 மாத காலமாக யாழ். பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. இதன் பின்னர் பல்கலைக்கழக நிர்வாகம் மேற்கொண்ட முயற்சிகளையடுத்து கடந்த 19ஆம்திகதி (திங்கட்கிழமை) பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்கு ஏற்பாடாகியிருந்தது. விரிவுரைகளும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

ஆயினும் அதற்கு முதல் நாள் பல்கலைக்கழகக் கலைப்பீட இறுதி வருட மாணவன் கிருஷ்ணர் கமலதாஸ் (வயது 24) சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து கடந்த மூன்று தினங்களாக மாணவர்கள் துக்கம் அனுஷ்டித்ததுடன் தமது கல்விச் செயற்பாடுகளையும் பகிஷ்கரித்தனர்.

இதனையடுத்து நேற்றுமுதல் பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகள் வழமை போன்று ஆரம்பமாகின. மாணவர்கள் நேற்று விரிவுரைகளுக்குச் சமுகமளித்திருந்தனர்.

இதேவேளை-

கழகச் சுற்றாடலில் பெருமளவு படையினரின் பிரசன்னம் உள்ளமையால் மாணவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளை சுதந்திரமான முறையில் மேற்கொள்வதற்கு அஞ்சுவதாக அவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பிரச்சினை தொடர்பாக தாம் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் தொடர்பு கொண்டு பேசியுள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டின் குட்டிச் செய்திகள்
யாழ்ப்பாணம்

இளைஞனின் சடலம் புத்தூரில் மீட்பு

புத்தூர், வதரவத்தைப் பகுதியில் வெங்காயத் தோட்டத்தில் இருந்து சூட்டுக்காயங்களுடன் இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

30 வயது மதிக்கத்தக்க இளைஞனின் சடலம் நேற்று மாலை வரை அடையாளம் காணப்படவில்லை.

மல்லாகம் நீதிவான் திருமதி ச. இளங்கோவன் சம்பவ இடத்தில் நேற்று விசாரணைகளை மேற்கொண்டார்.

சடலத்தை பிரேத பரிசோதனையின் பின் அடையாளம் காணும் உறவினர்களிடம் கையளிக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (அ -1)

துணுக்காய் வலய ஆசிரியர்களுக்குச் சம்பளம்

துணுக்காய் வவுனியா வடக்கு கல்வி வலயங்களில் பணிபுரிந்து தற்போது குடாநாட்டில் தங்கியிருக்கும் ஆசிரியர்களுக்கு இன்று வெள்ளிக்கிழமை யாழ். வலயக் கல்வி அலுவலகத்தில் வைத்து சம்பளம் வழங்கப்படவுள்ளது என்று கல்விவலயக் கணக்காளர் தெரிவித்துள்ளார்.

கடந்த நவம்பர் மாதத்தில் இருந்து நிலுவையுடன் இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

கிளிநொச்சி,முல்லைத்தீவு வலயங்களுக்கான சம்பளப்பட்டியல் கிடைத்ததும் அவர்களுக்கான கொடுப்பனவு வழங்கப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். (1-203)

தமிழ்மக்களின் இறைமை, சுயநிர்ணய உரிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றோயல் நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன் தமிழீழ விடுதலைப் புலிகளும் சிறிலங்கா அரசாங்கமும் பெப்ரவரி 22, 2002 அன்று போர் நிறுத்த ஒப்பந்தத்தினுள் நுழைந்துகொண்டன. தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் அப்போதைய சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு ஐந்து வருடங்கள் கடந்துவிட்டன.

இந்த ஒப்பந்தமானது தற்போது எழுத்தளவில் மட்டுமே உயிர் வாழ்ந்தாலும், இலங்கைத் தீவில் சமாதானத்திற்கான தேடலிலும், இனப்பிரச்சினையினை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான முயற்சிகளை நோக்கிய வரலாற்றுப் பயணத்திலும் இது ஓர் தனித்துவமான இடத்தைப் பிடித்துள்ளது. வரலாற்றில் முன்னெப்போதும் நிகழ்ந்திராத நிலையில், போர் நிறுத்த ஒப்பந்தமானது சர்வதேச சமூகத்தின் முழுமையான ஆதரவுடன் உருவாக்கப்பட்டு தரப்பினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தமிழீழ நடைமுறை அரசின் இருப்பினை அங்கீகரிக்கும் ஒப்பந்தம்

சிங்களவர்களால் சிங்களவர்களுக்காகவே உருவாக்கப்பட்ட, தீவின் ஏனைய சமூகத்தவரை ஒதுக்குவதற்குத் துணை புரிந்த இலங்கையின் பெரும்பான்மையினரது அரசியலமைப்பினது எல்லைகளைக் கடந்தே போர் நிறுத்த ஒப்பந்தம் வரையப்பட்டது. இந்த ஒப்பந்தமானது தமிழீழ நடைமுறை யதார்த்த அரசினது இருப்பினை அங்கீகரித்துள்ளது. இங்கு நடைமுறை யதார்த்த அரசு எனும் போது அது, தனித்துவமான மக்கள், பாதுகாப்புப்படை, காவல்துறை, நீதித்துறை, சிவில் நிர்வாகம் என்பவற்றுடன் மக்களைச் சிறந்த வகையில் நல்வழியில் ஆளுவதற்கான ஏனைய அனைத்து அம்சங்கள், அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளைக்கொண்ட தமிழர் தாயகத்தின் இருப்பினைப் பிரதிபலிக்கும் கட்டுப்பாட்டு எல்லைகளைத் தன்னகத்தே கொண்டு, ஓர் அரசுடன் உடன்பாட்டினை எட்டும் திறன் போன்ற தனித்துவமான அம்சங்களைக் கொண்டிருக்கிறது. சிறிலங்கா அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலுள்ள படைவலுச் சமநிலையினை போர் நிறுத்த ஒப்பந்தமானது அங்கீகரித்துள்ளதுடன், அது படைவலுச் சமநிலையின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டது.

இலங்கைத் தீவு பிரித்தானியக் காலனித்துவத்திலிருந்து விடுபட்ட நாள் முதல் தொடர்ச்சியாக வந்த சிங்கள பௌத்த பேரினவாத அரசுகளின் திட்டமிட்ட அடக்குமுறைக்கும் ஒடுக்குமுறைக்கும் தமிழர்கள் அவர்களது தாயகத்திலேயே முகம்கொடுத்து வந்தனர்.

சிறிலங்கா சுதந்திரமடைந்ததிலிருந்து முதல் மூன்று தசாப்தங்களாக தமிழ் மக்களின் நீதிக்கான தொடர்ச்சியான அமைதிவழிப் போராட்டத்தினை சிறிலங்கா அரசாங்கம் தனது இராணுவத்தின் துணைகொண்டு ஒடுக்கியது. இதன் காரணமாக தமிழர்களது அமைதிவழிப் போராட்டம் ஆயுதப் போராட்டமாகப் பரிணமித்தது.

தமிழர்கள் வஞ்சகத்தனமாக ஏமாற்றப்பட்டனர்

தமிழ் மக்களின் அமைதிவழிப் போராட்டம் மற்றும் ஆயுதந் தாங்கிய தேசிய விடுதலைப் போராட்டம் என்பன இடம் பெற்ற காலப்பகுதியில், அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த சிறிலங்காவினது சிங்கள அரசாங்கத்திற்கும் தமிழ் தேசத்தின் பிரதிநிதிகளுக்குமிடையில் பல தடவைகள் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. தரப்பினருக்கிடையே படைவலுச் சமநிலை காணப்படாதமையினாலும், சர்வதேச ஈடுபாடு இல்லாதமையினாலும் முன்னர் இடம்பெற்ற அனைத்துப் பேச்சுக்களும் தோல்வியில் முடிந்ததோடு, சிறிலங்கா அரசாங்கம் எட்டப்பட்ட அனைத்து ஒப்பந்தங்களையும் ஒருதலைப்பட்சமாக முறித்துக்கொண்டது. இதனால் தமிழ் மக்கள் மீண்டும் மீண்டும் மிகவும் வஞ்சகத்தனமாக ஏமாற்றப்பட்டனர்.

இவ்வாறாக அமைதி முயற்சிகள் தோற்றுப்போன கசப்பான வரலாற்றை அடிப்படையாகக் கொண்டே 2002இல் போர் நிறுத்த ஒப்பந்தம் உருவானது. இம்முறை, நோர்வேயினது அனுசரணையும், சர்வதேச சமூகத்தின் தீவிரமான ஆதரவும், பங்களிப்பும் தமிழ் மக்களுக்கு அமைதி முயற்சிகளில் முதற்தடவையாக நம்பிக்கையையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தியது. ஆனால் இன்று, வருந்தத்தக்க வகையில், சமாதான முயற்சிகளில் சர்வதேச சமூகத்தினது ஈடுபாடு உண்மையானதாகவோ ஆக்கபூர்வமானதாகவோ காணப்படவில்லை.

இராணுவ வழிமுறையில் நகர்ந்து செல்லும் சிறீலங்கா அரசாங்கம் மீது கடுமையான அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கோ, ஆக்கபூர்வமாக எதிர் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கோ சர்வதேச சமூகம் விரும்பின்றிச் செயற்படுவதே போர் நிறுத்த ஒப்பந்தத்தினைப் பலமிழக்கச் செய்துள்ளது. தரையிலும் வானிலும் கடலிலுமென சிறீலங்காவினது முப்படைகளும் மேற்கொண்டுவரும் கடுமையான ஆத்திரமூட்டல் நடவடிக்கைகளின் மத்தியிலும் தமிழீழ விடுதலைப்புலிகள் போதிய பொறுமைகாத்து வந்துள்ளனர். இக்காலப் பகுதியில் நாம் எமது பல போராளிகளை இழந்துள்ளோம். சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமித்து நிற்கும் தமிழர் தாயகப் பகுதிகளில் தமிழ் மக்கள் கொல்லப்படுகிறார்கள். பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தமிழ் புத்திஜீவிகள் படுகொலை செய்யப்படுகிறார்கள் மற்றும் பெருந்தொகையான தமிழர்கள் காணாமற் போகிறார்கள்.

ஆனால், அப்பட்டமான உண்மைகள் இவ்வாறிருக்கின்ற போதும், சர்வதேச சமூகமோ இலங்கை அரசாங்கத்தின் மீது எந்த வகையான நடவடிக்கைகளையும் எடுக்காது நீதியற்ற வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் தண்டனை வழங்கும் வகையிலமையும் செயற்பாடுகளை முன்னெடுத்துவருகிறது. பேச்சுக்களில் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஒரு சமதரப்பு என்ற யதார்த்தத்தினை இது [illegible] நெடுப்புக்களையும் பாதிப்பதாக அமைகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்[illegible] போன்ற நிலைப்பாடு வலுப்பெறுமிடத்து, தமிழர்கள் விடயத்தில் இலங்கை அரசாங்கம் அதிக கடும் போக்கைக் கைக்கொள்வதற்கே அது வழிவகுக்கும்.

அத்துடன் சிறீலங்கா அரசாங்கம் மிகவும் கடுமையான முறையில் போர்நிறுத்த உடன்படிக்கையை மீறுகின்ற போதும் பெரும் மனித உரிமை மீறல்களை மேற்கொள்ளும் போதும் சர்வதேச சமூகமானது நீதியின்பால் நின்று செயற்பட்டு, அவற்றைத் தடுத்துநிறுத்த தகுந்த நடவடிக்கைகளை எடுக்காதுபோனால், அது தமிழர் தாயகப் பகுதியில் ஓர் போர்ச்சூழல் ஏற்படுவதற்கே வழிவகுக்கும்.

சமாதான முன்னெடுப்புகள் தோல்வியுற்றமை சினம் தந்துள்ளது

சர்வதேசத்தினது பங்குபற்றலுடன் இடம்பெற்ற சமாதான முன்னெடுப்புக்களும் தற்போது தோல்வியில் முடிவடைந்துள்ளமை தமிழ் மக்களைச் சினங்கொள்ள வைத்துள்ளது. போர் நிறுத்த ஒப்பந்தமும் சர்வதேச அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்ட சமாதான முன்னெடுப்புக்களும், ஏனைய ஒப்பந்தங்களைப் போலவும் பேச்சுக்களைப்போலவும் தற்போது தோல்வியடைந்திருப்பதுதான் தமிழ் மக்களுக்குக் கசப்பான ஏமாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறானதோர் புறநிலையில்தான் தமிழர் தேசத்தில் இயல்புநிலையினை ஏற்படுத்தும் வகையில், போர்நிறுத்த உடன்படிக்கையினை முழுமையாக ஏற்றுக்கொண்டு அதனை முழுமையாக அமுல்ப்படுத்தவேண்டியதன் அவசியத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்தார்கள். ஆறு வருடங்களின் முன்னர் டிசம்பர் 2000ஆம் ஆண்டில் புலிகள் ஒருதலைப்பட்சமாக போர் நிறுத்தத்தினை அறிவித்தார்கள். ஐந்து வருடங்களுக்கு முன்னர் டிசம்பர் 24, 2001 இல் மீண்டும் புலிகள் ஒருதலைப்பட்சமாக போர் நிறுத்தத்தைப் பிரகடனம் செய்தார்கள். நோர்வேயின் முயற்சிகளைத் தொடர்ந்து தற்போதைய போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுவதற்கு மேற்குறித்த இந்த அறிவிப்பே வழிவகுத்தது.

போர் நிறுத்த உடன்படிக்கையானது சிறிலங்கா அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பகைமையை முடிவுக்குக் கொண்டுவந்து போரினால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகத்தில் இயல்பு நிலையை ஏற்படுத்தி பேச்சுகளுக்கான உகந்த புறநிலையைத் தோற்றுவிப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தது. மூன்று தசாப்தங்களாகத் தொடர்ந்த மோசமான போரின் காரணமாக தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பெரும் மனிதநேய நெருக்கடிகளுக்குத் தீர்வுகாண்பதை அனைத்து சுற்று அமைதிப் பேச்சுக்களிலும் நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தோம். தமிழர் தாயகத்தில் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்கும் ஆக்கிரமிப்பும் இராணுவக் கெடுபிடிகளும் நீங்காது அமைதிப் பேச்சுக்களுக்கான சாதகமான உகந்த புறநிலை ஏற்பட முடியாது என்பதை நேரடி சமாதானப் பேச்சுகளில் வலியுறுத்தினோம்.

பேச்சுகளில் முழுமையான ஈடுபாட்டுடன் பங்குபற்றினோம்

போர் நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்ததைத் தொடர்ந்து இடம் பெற்ற அனைத்துச் சுற்றுப் பேச்சுக்களின் போதும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு முழுமையான ஈடுபாட்டுடன் அவற்றில் பங்கெடுத்தது. சிறிலங்கா அரசாங்கம் போர் நிறுத்த ஒப்பந்தத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும், தமிழர் தாயகத்தில் மனிதாபிமானப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கேற்ப தரப்பினருடன் இணைந்து நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் நாங்கள் வலியுறுத்தினோம். தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதும், தரப்பினர் மத்தியில் நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் கட்டியெழுப்புவதும், அரசியல் பிரச்சினைகள் தொடர்பான பேச்சுக்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்படவேண்டும் எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

காலங்கடத்தும் நடவடிக்கை

எவ்வாறிருப்பினும் - இவற்றை மதித்து நடப்பதற்குத் தவறிய இலங்கை அரசாங்கம், நிலைமையினை மேலும் மோசமாக்கும் வகையில் செயற்பட்டது. போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பிரகாரம், தமிழர் தாயகப் பகுதிகளில் இயல்புநிலையினை உருவாக்குவதற்குத் தேவையான நடவடிக்கையினை இரண்டு தரப்பினரும் முன்னெடுக்க வேண்டும். போர் நிறுத்த ஒப்பந்தத்தின் மூலம் அது ஏற்றுக்கொண்ட கடப்பாடுகளைப் புறந்தள்ளி, சிறிலங்கா அரசாங்கமானது, சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைச் சட்டங்களைமீறி, பொது மக்கள் வாழிடங்களை இன்னமும் ஆக்கிரமித்து நிற்கிறது. ஒவ்வொரு கட்டப் பேச்சுக்களின்போதும், தமிழர் தாயகப் பகுதியில் இயல்புநிலை ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தினை வலியுறுத்தினோம். இது தொடர்பில் தனக்குள்ள கடப்பாடுகளைப் புறந்தள்ளிய இலங்கை அரசாங்கம் காலங்கடத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. அதேநேரம் மக்களின் வாழ்நிலையில் முன்னேற்றம் ஏற்படவில்லை. மாறாக அவர்களின் நிலைமை மோசமாகிச் சென்றது.

நிலைமையை மேலும் மோசமாக்கும் வகையில் அரசாங்கம் தான் மதித்துச் செயற்பட வேண்டிய கடப்பாடுடைய ஒப்பந்த விதிகளை மீறி, துணை இராணுவக் குழுக்களின் உதவியுடன் மிகவும் மோசமான மனித உரிமை மீறல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறது. சிறீலங்கா அரசாங்கமானது அனைத்துத் துணை இராணுவக் குழுக்களினது ஆயுதங்களை குறிப்பிட்டதொரு காலவரையறைக்குள் களைந்துவிட வேண்டுமென ஒப்பந்த விதி 1.8 கூறுகிறது. மோதல்கள் இடம் பெறும் பகுதிகளில் துணை இராணுவக் குழுக்களின் இருப்பினை சிறீலங்கா போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினது அவதானிப்புகள் உறுதிப்படுத்துவதோடு, 2006 ஆம் [illegible] அறிக்கையும் இந்த உண்மையினை ஏற்றுக்கொள்கிறது. [illegible] நடவடிக்கையாக விஜயம் மேற்கொண்டிருந்த ஐநா சிறப்புத் தூதுவர் சிறிலங்கா இராணுவமும் துணை இராணுவக் குழுக்களும் இணைந்து ஆட்கடத்தல்கள் மற்றும் சிறுவர் ஆட்சேர்ப்பில் ஈடுபடுவதை தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழர் வாழ்வினை மேம்படுத்தும் பிரேரணைகள் கைவிடப்பட்டன

2002 தொடக்கம் 2006 வரையான காலப்பகுதியில் நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன் சிறிலங்கா அரசாங்கத்துடனான பேச்சுக்களில் நாங்கள் ஆறு முறை பங்கெடுத்துள்ளோம். தமிழர் தாயகத்தில் அவசர மனிதநேய நெருக்கடிகளுக்கு முகங்கொடுப்பதற்கு பல பிரேரணைகளும் கட்டமைப்புகளும் ஆரம்ப கட்டப் பேச்சுகளின் போது உருவாக்கப்பட்டன. இவ்வாறாக முன்வைக்கப்பட்ட நிர்வாகக் கட்டமைப்புக்கள் மற்றும் உடன்பாடுகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்குமாக இருந்தால் அது தமிழர்களது வாழ்நிலையினை போதுமானளவு மேம்படுத்தியிருக்கும். இவற்றில் சில பிரேரணைகளை சிறிலங்கா அரசாங்கம் ஏற்றுக் கொண்ட போதும் பின்னர் அவையனைத்துமே நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளாக புறந்தள்ளப்பட்டதோடு சிறிலங்கா அரசியலமைப்பைக் காரணங்காட்டி அவை கைவிடப்பட்டன.

இதனைத் தொடர்ந்து துரித மனிதாபிமான அடிப்படையில், இயல்பு நிலைமையைக் கொண்டுவருவதற்கு வடக்கு கிழக்குக்கான உடனடி புனர்வாழ்வுக்கான உப குழு (Subcommitee for Immediate Rehabilitation of North East-SIHRN) உருவாக்கப்பட்டது. இருப்பினும் இது சிறிலங்கா அரசினால் செயலிழக்கச் செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து நாம் தமிழ் மக்களின் உடனடி மனிதாபிமானத் தேவைகளுக்கு முகங்கொடுத்து அடுத்த சுற்றுப் பேச்சுகளுக்கான புறநிலையைத் தோற்றுவிக்கும் பொருட்டு இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான பிரேரணையைச் சமர்ப்பித்தோம். இவ்விடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான பிரேரணையின் அடிப்படையில் அமைதிப் பேச்சுகளை ஆரம்பிக்க விரும்பாத அன்றைய சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சிறிலங்கா பாராளுமன்றத்தைக் கலைத்தார். இதனைத் தொடர்ந்து நடைபெற்ற தேர்தலில் தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டும் அடுத்த கட்டப் பேச்சுக்களுக்கான அடிப்படையாக இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை முன்னிறுத்தியும் போட்டியிட்ட 22 தமிழ் பிரதிநிதிகள் பெரும் வெற்றியடைந்தனர். ஆனால் சிறிலங்கா அரசாங்கம் தமிழ் மக்கள் ஜனநாயக வழிமுறையூடாக வெளிப்படுத்திய விருப்பினை நிராகரித்து இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பில் பேச்சுக்களை மேற்கொள்ள மறுத்தது.

இவ்வாறானதோர் புறநிலையில் டிசம்பர் 2005ஆம் ஆண்டு இலங்கைத் தீவினை ஆழிப்பேரலை மிக மோசமாகத் தாக்கியது. தொடர்ந்துவந்த இனப்போரினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த தமிழ் மக்களே இலங்கைத்தீவில் ஆழிப்பேரலையினால் அதிகம் பாதிக்கப்பட்டனர். ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பல ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். பல ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்தனர். சிறிலங்கா அரசாங்கத்தின் எவ்வித உதவிகளுமின்றிய நிலையில் எமது இராணுவ சிவில் கட்டமைப்புகள் மற்றும் சர்வதேச உள்நாட்டு தொண்டு அமைப்புகள் தமிழர் தாயகத்தில் மிகப்பெரியதோர் மனிதநேய நெருக்கடிக்கு முகங்கொடுத்து பாராட்டத்தக்க வகையில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டன.

நிர்க்கதியில் விட்டுவிட்டு வெளியேறிய சர்வதேச சமூகம்

இதில் எமது புலம்பெயர்ந்த மக்களின் உதவியே உடனடியாக பெரும் மனிதநேய நெருக்கடிக்கு முகங்கொடுக்கத் துணைநின்றது. ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பகுதிகளில் சர்வதேச உதவிகளைப் பகிர்ந்தளிக்கும் நோக்கில், இவ்வியற்கை அழிவு இடம்பெற்று ஆறு மாதங்களின் பின்னர் நோர்வே அரசின் அனுசரணையுடன் சர்வதேச உதவி வழங்கும் அமைப்புகளின் உதவியுடனும் சுனாமிக்குப் பின்னான நடவடிக்கை முகாமைத்துவக் கட்டமைப்பு உடன்படிக்கை எட்டப்பட்டது. ஓர் மனிதநேய உதவிக்கான இக்கட்டமைப்பும் சிறிலங்கா அரசாங்கத்தால் அரசியலமைப்பைக் காரணங்காட்டி நிராகரிக்கப்பட்டது. சிறிலங்காவில் சட்ட பன்மைத்துவம் இல்லையென்பதைக் காட்டுவதான இன்னொரு உதாரணமாக இது அமைகிறது. மனிதாபிமானம் மிக்க இந்த இயற்கை அனர்த்த முகாமைத்துவ விடயத்திற்கூட தமிழர்கள் நீதி பெறவில்லை. சமமாக நடத்தப்படவுமில்லை. இந்த நிலையில், ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட தமிழர்களது பிரச்சினைகளைக் கையாள்வதற்கு மாற்று வழிமுறைகளைக் கடைப்பிடிப்பதற்குப் பதிலாக சர்வதேச சமூகமோ, பாதிக்கப்பட்ட மக்களை நிர்க்கதியில் விட்டுவிட்டு வெளியேறியது.

மகிந்தாவின் வரவோடு ஆரம்பித்தது நிழல் யுத்தம்

இச்சூழமைவிற்தான் 2005 ஆம் ஆண்டு சிறீலங்காவின் தற்போதைய சனாதிபதி மகிந்த ராஜபக்ச அதிகளவிலான சிங்கள வாக்குகளைப் பெற்று சிறீலங்காவின் சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மகிந்த ராஜபக்சவின் வரவுடன் தமிழர்களுக்கெதிரான நிழல் யுத்தம் முடுக்கிவிடப்பட்டது. தமிழர் தேசத்தின் இருண்ட பகுதி ஆரம்பமானது. கொடுமையான கொலைகள் மற்றும் காணாமற்போதல்களால் மக்கள் அச்சமடைந்தார்கள். சிறிலங்கா அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்திய பாராளுமன்ற உறுப்பினர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். தமிழ் மக்கள் பிரதிநிதிகள் பத்திரிகையாளர்கள், மாணவர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் என சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் காணாமற்போதல்களுக்கும் படுகொலைகளுக்கும் முகங்கொடுத்துவருகின்றனர். அரச படைகளாலும், துணை இராணுவக் குழுக்களாலும் தமிழ்ப் பொதுமக்கள் கடத்தப்படுவதும் கொல்லப்படுவதும் தொடரும் நிலையில் அரசாங்க ஆக்கிரமிப்புப் பகுதிகள் கொலைக்களங்களாக மாறிவிட்டன. குறித்த பகுதிகளில் வாழும் தமிழ்ப் பொதுமக்கள் இயல்புநிலையினை இழந்து அச்சத்தின் மத்தியில் தமது வாழ்க்கையினை ஓட்டுகிறார்கள்.

வலிந்து போருக்கு இழுக்கும் நடவடிக்கை

கொலைகள், காணாமற்போதல்கள், துன்புறுத்தல்கள் என்பவற்றுடன் சிறிலங்கா அரசாங்கமானது வகைதொகையற்ற விமானக் குண்டுத்தாக்குதல்களைத் தமிழர் தாயகப் பகுதிகளில் நடாத்திவருகின்றது. [illegible] சுட்டிக் காட்டப்பட்டதைப் போல ஆனைய அரசாங்கத்தினைப் போலவே இலங்கை அரசாங்கமும் [illegible] விமானக் குண்டுத்தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மக்கள் வாழிடங்கள், மருத்துவமனைகள் மற்றும் பாடசாலைகள் உள்ளிட்ட மக்கள் செறிந்துவாழும் பிரதேசங்கள் மீது விமானக்குண்டுத் தாக்குதல்களை மேற்கொள்வதானது, ஜெனிவா உடன்படிக்கைகளது சரத்து 147இன் அடிப்படையில் ஓர் போர்க் குற்றமாகும். போர் நிறுத்த ஒப்பந்தத்தின் சரத்து 1.3 இற்கு முற்றிலும் முரணான வகையில் சிறிலங்கா அரசாங்கம் தமிழ் மக்கள் மீதும் அவர்களது சொத்துக்கள் மீதும் தாக்குதல்களை நடத்துவதோடு தமிழர் தாயகத்தையும் ஆக்கிரமித்து நிற்கிறது. இவ்வாறாக, புலிகளை வலிந்து போருக்கிழுக்கும் நடவடிக்கைகளை சிறிலங்கா அரசு மேற்கொண்ட போதும், புலிகள் தங்களால் இயன்ற பொறுமையினைக் கடைப்பிடித்து, சில தற்காப்புத் தாக்குதல்களில் மட்டுமே ஈடுபட்டு வந்துள்ளார்கள்.

காத்திரமான நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் எடுக்கத்தவறியது

மோசமாகிச் செல்லும் இந்த நிலையில்தான் 2006 ஆம் ஆண்டு தொடக்கத்தில் போர் நிறுத்த உடன்படிக்கையின் (ICCPR International Covenant on Civil and Political Rights) முழுமையான அமுலாக்கம் குறித்து சுவிற்சர்லாந்தின் ஜெனிவா நகரில் பேச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்தப் பேச்சுக்களின்போது போர் நிறுத்த ஒப்பந்தத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக வாக்குறுதியளித்த சிறிலங்கா அரசாங்கம் துணை இராணுவக் குழுக்களின் ஆயுதங்களைக் களைவதாகக் கூறியது. ஜெனிவா பேச்சுக்களின் போது அரச பேச்சுக்குழு வழங்கிய வாக்குறுதிகளுக்கு முற்றிலும் முரணாக, தமிழர் தாயகப் பகுதிகளில் மிகவும் மோசமான இராணுவ நடவடிக்கைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. தமிழ்மக்கள் தொடர்ந்தும் கொல்லப்பட்டார்கள். காணாமற்போனார்கள். சிறிலங்கா அரசாங்கம் ஐநாவின் சர்வதேச குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டுள்ள நாடென்ற வகையில் இக்கொலைகள் மற்றும் காணாமற்போதல்கள் தொடர்பான பக்கச்சார்பற்ற நீதியான விசாரணைகளை மேற்கொள்ளாமல் தவறியுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் இப்படுகொலைகள் காணாமற்போதல்கள் குறித்து ஐநா மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் லூயிஸ் ஆபர் மற்றும் முன்னைய ஐநா பொதுச் செயலாளர் கோபி அனான் ஆகியோரின் ஆழ்ந்த கரிசனைகளையும் கண்டனங்களையும் நினைவுபடுத்த நாம் விரும்புகின்றோம். மேலும் சிறீலங்கா இராணுவத்தாலும் துணை இராணுவக் குழுக்களாலும் மேற்கொள்ளப்பட்ட அச்சுறுத்தல் படுகொலைகளுக்கான சான்றுகள் தம்மிடமிருப்பதாக சர்வதேச மன்னிப்புச்சபை மேமாதம் 2006 ஆம் ஆண்டு வெளியிட்ட தனது கண்டன அறிக்கையில் (AI Index ASA 37/01/2006) வெளிப்படுத்தியது.

நெகிழ்வுப்போக்கைக் கடைப்பிடித்தோம்

தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் இப்படுகொலைகள் குறித்து சர்வதேச சமூகம் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கத்தவறி, வெறும் அறிக்கைகளை மட்டும் வெளியிடுவதானது, தமிழர்களது பிரச்சினை தொடர்பில் சர்வதேச சமூகத்தின் நேர்மைத் தன்மை மற்றும் விளைத்திறன் தொடர்பில் கேள்வியினை எழுப்பியுள்ளது. தமிழர் தாயகப் பகுதிகளில் மனிதத்திற்கெதிரான குற்றங்கள் அரங்கேறிக்கொண்டிருக்க, தமிழீழ விடுதலைப் புலிகளோ, அதியுச்ச பொறுமையுடனிருந்தவாறு போர் நிறுத்த உடன்படிக்கையின் முழுமையான அமுலாக்கத்தை வலியுறுத்தினர். குறித்த இந்தச் சூழமைவில், நாம் சர்வதேச சமூகத்தின் அழைப்பை ஏற்று மீண்டும் சுவிற்சர்லாந்தின் ஜெனிவாவில் நோர்வேயினது அனுசரணையுடன் சுவிஸ் அரசாங்கத்தினது ஏற்பாட்டுடனும் ஒக்ரோபர் 2006இல் அரச தூதுக்குழுவுடன் பேச்சுக்களை மேற்கொண்டோம். இப்பேச்சுகளில் நாம் எமது அதியுச்ச நெகிழ்வுப் போக்கையும் பொறுமையையும் வெளிப்படுத்தியிருந்தோம்.

ஏ-9 பாதையை மூடி பேர்லின் சுவர்

யாழ் குடாநாட்டிற்கான ஒரே ஒரு தரைவழிப் பாதையான ஏ9 பாதையினை மூடி அங்கு பெரும் மனித அவலம் ஏற்படுவதற்கு வழிவகுக்கப்பட்டிருந்தது நாங்கள்

(4ஆம் பக்கம் பார்க்க)

நாளை

மாசி 12
சனிக்கிழமை
24.02.2007
திதி: ஸப்தமி
காலை : 07.31
நட்சத்திரம் : கார்த்திகை
முற்பகல் : 03.53
சுபநேரம் : 05.30 - 05.00
ராகுகாலம் : 09.30 - 11.00

மருத்துவத்துறை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவாகியுள்ளனர்.

ஆகவே, மாவட்ட கோட்ட முறையிலான தெரிவு குறைந்திருப்பதற்குக் காரணம் என்ன? யாழ்ப்பாண மாவட்டக் குடி சன மதிப்பீடு எந்த வருடத்துக்குரிய புள்ளி விவரம் கணக்கில் எடுக்கப்பட்டிருக்கிறது. 2006 ஆம் ஆண்டுக்குரியதற்குப் பதிலாக 2005 ஆம் ஆண்டுக்குரிய புள்வி விவரம் கணக்கில் எடுக்கப்பட்டுள்ளதா என்று கல்வியாளர் வட்டாரங்கள் கேள்வி எழுப்பியுள் ளன.

இது விடயமாக மானிய ஆணைக்குழுவின் நிலைப்பாட்டை அறிய முனைந்த போது, அது குறித்து தமக்கு எவ்வித முறைப்பாடும் இதுவரை கிடைக்கவில்லை என்று அந்த வட்டாரங்கள் நேற்று உதயனுக்குத் தெரிவித்தன.

குறைந்த எண்ணிக்கையிலானமாணவர்கள் மாவட்டக் கோட்டாவின் கீழ் தெரிவானது குறித்து கல்லூரி அதிபர்களும் கல்வி மான்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண் டும்என்று மாணவர்களும், பெற்றோர்களும் உதயனுக்குக் கருத்துத் தெரிவித்தனர்.

இதேவேளை, யாழ்.மாவட்டத்திலிருந்து குறைந்த எண்ணிக்கையான மாணவர்கள் தெரிவானது குறித்து நேற்று மாணவர்களும் பெற்றோர்களும் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர். (அ)

தமிழ்மக்களின் இறைமை....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுக்களின் போது சுட்டிக் காட்டினோம். அண்ணளவாக 50,000 ஆயுதப்படையினர் ஆக்கிரமித்து நிற்கும் குடாநாட்டுக்கான பாதை மூடப்பட்டதன் காரணமாக, அங்கு ஆறு இலட்சம் பொதுமக்கள் திறந்தவெளிச் சிறைச்சாலையினுள் அடைக்கப்பட்டவரானார்கள். குறித்த இந்த நெடுஞ்சாலையினை திறக்க அரச தூதுக்குழுவினர் உடன்பட மறுத்தமையானது பேச்சுக்கள் தோல்வியில் முடிவதற்கு வழிவகுத்தது. இப்பாதை மூடப்பட்டிருப்பது புதிய போரின் சுவரினைத் தோற்றுவிக்கின்றது என நாம் சுட்டிக் காட்டியிருந்தோம். மக்களின் சுதந்திரமான நடமாட்டத்திற்கான உரிமையை மீறுகின்ற நடவடிக்கையாக அமைந்த ஏ-9 சாலை மூடப்பட்டமை யுத்தநிறுத்த உடன்படிக்கையையும் மீறியுள்ளதோடு, அது பொதுமக்களுக்கு உணவு மற்றும் மருந்துப்பொருட்கள் செல்வதையும் தடுக்கிறது. குறித்ததொரு மக்களுக்கு உணவு மற்றும் மருந்துப்பொருட்கள் செல்லவிடாமல் தடுப்பதானது சர்வதேச சட்டத்தினை (சரத்து 147) முற்றாக மீறும் செயல் என்பதோடு, தமிழ் மக்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதை உறுதிப்படுத்தத் தவறியது ஜெனீவா உடன்பாடு நான்கின் சரத்துக்கள் 55 மற்றும் 59-63 ஆகியவற்றை முற்றாக மீறும் செயலாகும்.

செயலற்றுக்கிடக்கும் கொழும்புக் கட்சிகளின் புரிந்துணர்வு ஒப்பந்தம

நாட்டினது இனப்பிரச்சினையினைத் தீர்ப்பதற்கான ஓர் முக்கிய நகர்வாக கொழும்பினது இரண்டு அரசியல் கட்சிகளின் மத்தியில் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு உடன்பாட்டினைக் காட்டுவதற்கு ஜெனீவாவில் அரச தூதுக்குழுவினர் முனைந்தார்கள். தற்போது இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் செயலற்றுக் கிடக்கிறது. அத்துடன், இந்த செயலற்றுப்போகும் அரசியல் முறைமை சிறிலங்காவிற்குச் சுதந்திரம் கிடைத்த நாள்முதல் அதனது மக்களுக்கு துன்பத்தையே விளைவித்து நிற்கிறது.

இன்றுடன் போர்நிறுத்த உடன்படிக்கை தனது ஐந்தாவது வருடத்தை அதாவது 1826 ஆவது நாளைக் கடக்கின்றது. போர் நிறுத்த உடன்படிக்கையின் இயல்புநிலையைக் கொண்டுவருவதற்கான சரத்து 2 பொதுமக்கள் மீதான சகல துன்புறுத்தல்களும் நீக்கப்பட்டு அவர்கள் மீளவும் தமது வாழிடங்களுக்கு திரும்புவதையும் வழிபாட்டிடங்கள், பாடசாலைகள் ஏனைய பொதுக் கட்டடங்கள் ஆகியவற்றை பொதுமக்கள் பயன்படுத்துவதையும் உறுதிப்படுத்துகின்றது. ஆனால், இன்றும் தமிழர் தாயகத்தில் மூன்றிலொரு மக்கள் வாழ்விடங்கள் இராணுவத்தின் ஆக்கிரமிப்பின் கீழ் அமைந்துள்ளது. 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அகதி முகாம்களில் வாழ்கின்றனர். போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னரும் அதியுச்ச இராணுவ நலன்கள் என்ற போர்வையில் மக்களை அவர்களின் வாழிடங்களிலிருந்து வலிந்து வெளியேற்றி தொடர்ந்தும் அவ்விடங்களை ஆக்கிரமித்து நிற்கின்றது. இச் செயற்பாடானது பொதுமக்களை அவர்களின் வாழிடங்களிலிருந்து வலிந்து வெளியேற்றுவதைத் தடுக்கும் ஜெனீவா உடன்படிக்கையின் இரண்டாவது மேலதிக இணைப்பின் 17 ஆவது சரத்தினை (Article 17 Geneva Conventions second Additional Protocol 2) மீறியுள்ளது. மேலும் தரை வழிப் போருக்கான 1907 ஹேக் உடன்படிக்கையின் 46 ஆவது சரத்து (Article 46 paragraph 2 of the 1907 Hague Convention) பொது மக்களின் உடமைகளைப் பறிமுதல் செய்வதைத் தடுக்கிறது. இன்று சர்வதேச அமைதி உடன்படிக்கைகளுக்கான முன்னுதாரணங்களாக இருக்கும் கொசோவோ, பொஸ்னியா, புருண்டி, ஜோர்ஜியா, மசிடோனியா போன்ற ஏனைய சர்வதேச அமைதி உடன்படிக்கைகள் இராணுவ நலன்களைக் காரணம் காட்டி இடம்பெயர்ந்த மக்கள் தமது வாழ்விடங்களுக்குத் திரும்பிச் செல்வதை மறுக்கவில்லை.

மனிதஅவலம் மக்களை வெறுப்பின் விளிம்புக்குத் தள்ளியுள்ளது

போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஐந்து வருடங்கள் பூர்த்தியாகியிருக்கும் நிலையில் தமிழர் தாயகத்தில், அரச படையினரால் கட்டவிழ்த்துவிடப்பட்ட மனித அவலம் எமது மக்களை வெறுப்பின் விளிம்புக்குத் தள்ளியுள்ளது. போர்நிறுத்த உடன்படிக்கையின் பின்னர் மாத்திரம் தமிழர் தாயகத்தில் 1591இற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டதோடு 674 பேர் காணாமற்போயுள்ளார்கள். உயர் பாதுகாப்பு வலயங்களைக் காரணங்காட்டி வெளியேற்றப்பட்ட 300,000க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் இன்னமும் அகதி முகாம்களில் அல்லற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அதைவிட அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளால் மாத்திரம் 2 லட்சத்து 10 ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

தமிழர் தரப்பை ஓரங்கட்டும் சர்வதேசம்

இவ்வாறானதோர் நெருக்கடியான கட்டத்தில் சர்வதேச சமூகத்தின் நடுநிலைமைத் தன்மையாலும் ஆக்கபூர்வமான பங்குபற்றுதலாலுமே நீதியான நிலையான அமைதியை தமிழர் தாயகத்தில் ஏற்படுத்த முடியும். இந்த யதார்த்தத்திற்கு முரணாகவும் பக்கச்சார்புடனும் செயற்பட்டு தமிழர்தரப்பை மாத்திரம் ஓரங்கட்டி பலவீனப்படுத்த முனைவது, சமாதான முனைப்புக்களைச் சிதைப்பதுடன் மட்டும் நின்றுவிடாது, தமிழர்களை அடக்கும் வகையிலமையும் சிங்கள அரசினது திட்டத்தை வலுப்படுத்துவதாகவே அமையும். மோதல்களை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கிலமைந்த எந்தவொரு போர்நிறுத்த உடன்படிக்கையினதும் இருப்பு, இரு தரப்பினது படை வலுச்சமநிலையும் சமஅந்தஸ்தும் பேணப்படுவதிலேயே தங்கியுள்ளது. ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசாங்கத்துக்கும் இடையிலான போர்நிறுத்த உடன்படிக்கையில் சமஅந்தஸ்தும் வலுச்சமநிலையும் பேணப்படுவதை உறுதிப்படுத்தவேண்டிய தேவை உணரப்படவில்லை. இந்தத் தேவை, எந்தவொரு பிணக்கினையும் சமாதான வழிமுறை மூலம் தீர்ப்பதற்கு அவசியமானதாக கருதப்படுகிறது. போர் நிறுத்த உடன்படிக்கை சிதைந்து போவதற்கும் அமைதிப் பேச்சுகள் குழம்புவதற்கும் இதுதான் வழிவகுத்தது.

அமைதிப்பேச்சை கேள்விக்குறியாக்கியது

சிறீலங்கா அரசின் பரப்புரைகளைச் செவிமடுத்து பேச்சுகளில் தமிழர் தரப்பின் பிரதிநிதிகளாகப் பங்குபற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என ஐரோப்பிய ஒன்றியம், கனடா ஆகிய நாடுகள் அறிவித்தமை அமைதிப்பேச்சுக்களின் முன்னெடுப்பை கேள்விக்குறியாக்கியதுடன், தமிழர்களது சுயநிர்ணய அரசியல் போராட்டத்தினை நசுக்கி, சிறீலங்கா அரசாங்கத்தின் விட்டுக்கொடாத இராணுவத் தீர்வை நோக்கிய நகர்வை வேகப்படுத்தியது துரதிஷ்டவசமானதே. சிறிலங்கா அரசின் மனிதஉரிமை மீறல்கள், கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இராணுவ முனைப்புக்கள் என்பன போர் நிறுத்த ஒப்பந்தத்தினை அர்த்தமற்றதாக்கிவிட்டது.

சர்வதேசத்தின் இரட்டை நிலைப்பாடு

தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதை கடந்த பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெருவெற்றி மூலம் தமிழ் மக்கள் ஜனநாயக முறையில் வெளிப்படுத்தியுள்ளனர். தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமைக்கான அரசியல் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் நீண்ட வரலாற்றைக் கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் தமது மக்களின் விடுதலைக்காகப் போராடிவரும் ஓர் தேசிய விடுதலை இயக்கம். எமது தலைவிதியை நாமே தீர்மானிக்கும் சுயநிர்ணய உரிமை கொண்ட மக்களாக வாழ்வதற்கே நாம் விரும்புகிறோம். சிறீலங்காவின் இறைமையையும் நில ஒருமைப்பாட்டையும் காரணங்காட்டி தமிழர் தாயகத்தின் இறைமையையும் சுயநிர்ணய உரிமையையும் மறுக்கும் சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடானது தமிழ் மக்களை விசனமடையச் செய்துள்ளது. சர்வதேச சமூகமானது இரட்டை நிலைப்பாட்டுடன் செயற்படுகிறது போலத் தெரிகிறது. அமெரிக்காஇ பிரித்தானியாஇ நோர்வேஇ இத்தாலி ஆகிய நாடுகளின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட தென்சூடான் மக்கோ உடன்படிக்கை (Machkos protocols) சூடானின் இறைமையையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் பாதிக்கின்றது என்றோ, சேர்பிய மொன்ரநீக்ரோ உடன்படிக்கை மற்றும் கொசோவோவின் எதிர்காலத்துக்கான தீர்மானம் சேர்பியாவின் இறைமையையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் பாதிக்கின்றது என்றோ சர்வதேச சமூகத்தால் நிராகரிக்கப்படவில்லை. இங்கு குறித்த இம்மக்கள் தமது சுயநிர்ணய உரிமையுடனும் இறைமையுடனும் வாழ வழிசெய்யப்பட்டுள்ளதை நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

எமது மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கு மாத்திரமே தீர்வுகாணும் நோக்கில் உருவாக்கப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையைக்கூட முழுமையாக நடைமுறைப்படுத்தாது, நிராகரிக்கப்பட்டுள்ளமையானது எமது மக்களின் நம்பிக்கைகளையும் சமாதான முன்னெடுப்புகள் தொடர்பான அவர்களது எதிர்பார்ப்புகளையும் சிதைத்துள்ளது. பயங்கரவாதத்திற்கு எதிரான போரெனக் கூறிக்கொண்டு, தற்போது சிறிலங்கா அரசாங்கம் முன்னெடுத்துவரும் போரானது ஒருபோதும் தமிழ் மக்களை அடிமைப்படுத்திவிடாது. இத்துடன், இந்த முனைப்புக்கள் இலங்கைத் தீவினது இனப்பிரச்சினைக்கு ஒரு நீதியான தீர்வையும் ஒருபோதும் ஏற்படுத்திவிடாது.மாறாக சுயநிர்ணய உரிமை கொண்ட இறைமையுள்ள மக்களாக வாழ்வதற்கான விடுதலைப் போராட்டப் பாதையில் தமிழ் மக்களை இட்டுச் செல்வதற்கே இது வழிவகுக்கும்.

மரண அறிவித்தல்கள்

பொன்னம்பலம் நல்லையா

(இளைப்பாறிய முகாமையாளர், இலங்கை வங்கி , யாழ்ப்பாணம்)

நுணாவில் மத்தி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் நல்லையா 21.02.2007 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் நவரத்தினத்தின் அன்புக் கணவரும் மயூறன், வாசுகி, வானதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் பரமசாமி, இரட்ணசபாபதி, சிவஞான பூபதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் மனோரஞ்சிதம் காலஞ்சென்ற விக்னேஸ்வரன் காலஞ்சென்ற பரமேஸ்வரன், தவரஞ்சிதம் காலஞ்சென்ற சோதீஸ்வரன், கனகம்மா, சற்குணவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசையிலுள்ள மகிந்த மலர்ச்சாலையில் நாளை (24.02.2007) சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 25.02.2007 ஞாயிற்றுக்கிழமை காலை கிரியைகள் நடைபெற்று, முற்பகல் 10 மணிக்கு கல்கிசை பொது மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

49, சென். லோறன்ஸ் வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு -06.
0112 360393, 0777 700716

தகவல்
ந.மயூறன் (மகன்).
(58403)

கனகசேகரம் முருகையா(நற்குணம்)

ஏழாலை மேற்கு, சிவகுரு வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசேகரம் - முருகையா. 22.02.2007 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசேகரம் (விஷகடி வைத்தியர்) -சின்னச்சி ஆகியோரின் அன்பு மகனும் அற்புதத்தின் அன்புக் கணவரும் ராஜன் கைலயங்கிரி (கைலை), தனஞ்செயன்(சின்னராசா), ஆதித்தன், பாலேந்ரா ஆகியோரின் அன்புத் தந்தையும் மோகனா, உமா, சத்தியா, ஆகியோரின் அன்பு மாமனும் துர்க்கா, தர்சிகா, பிரவீணன், கார்த்திகா, தேணுகா ஆகியோரின்அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.02.2007) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் உசத்தியோடை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவகுரு வீதி,
ஏழாலை மேற்கு,ஏழாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

நாடாளுமன்றில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று கூறி நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் நடத்திய அமைதியான போராட்டத்தை முன் உதாரணம் காட்டி ஜே.பி.யினரைக் கடுமையாகக் கண்டித்தார் சபாநாயகர்.

அரசு இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கையை கிழித்து எறியாவிட்டால், வடக்கு - கிழக்கைப் பிரிப்பதற்கு உயர்நீதிமன்றம் சென்றதுபோல் ரணில் - பிரபா ஒப்பந்தத்தைரத்துச் செய்யக்கோரி உயர் நீதிமன்றம் செல்ப்போவதாகவும் ஜே.வி.பியினர் எச்சரிக்கை விடுத்தனர்.

நேற்றுக்காலை நாடாளுமன்றம் கூடிய போது ஜே.வி.பி. நாடாளுமன்றக் குழுத்தலைவர் விமல் வீரவன்ஸ, ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் செய்துகொண்ட யுத்தநிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அரசு உடனடியாக ரத்துச் செய்யவேண்டும் எனக்கோரி விசேட உரை ஒன்றை ஆற்றினார்.

விமல் வீரவன்ஸவின் உரை

அப்போது அவர் கூறியதாவது:-

ஐந்து ஆண்டுகளின் முன் ரணில் விக்கிரமசிங்கவும், பிரபாகரனும் செய்துகொண்ட ஒப்பந்தம் தமது தாய் நாட்டைக் காட்டிக் கொடுக்கும் தேசத்துரோக ஒப்பந்தம். அதற்கு இன்று ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாகிவிட்டன. அதனால், அரசுக்கு எந்த நன்மையும் ஏற்படவில்லை.

ஆனால், இலங்கையில் அரச கட்டுப்பாட்டில் இல்லாத ஒரு பிரதேசம் புலிகளின் அதாவது, வேலுப்பிள்ளை பிரபாகரனின் கட்டுப்பாட்டில் இருக்கிறது என சர்வதேச அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

நோர்வே அரசின் சர்வாதிகார தலைமையின்கீழ் - நேரடிக் கண்காணிப்பில் - செய்து கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தம் இடைக்கால நிர்வாகசபை ஒன்றை அமைக்கவும் வழிவகுத்துள்ளது. இது தனித்தமிழ் ஈழ இராச்சியத்துக்கான அத்திவாரம். அதனால் தான் நாம் ஆரம்பம் முதலே இந்த ஒப்பந்தத்தை எதிர்த்தோம்.

இந்தத் தேசத்துரோக ஒப்பந்தம் இந்த நாட்டின் ஜனாதிபதிக்கோ, நாடாளுமன்றத்துக்கோ தெரியாமல் செய்துகொள்ளப்பட்டது.

ரணில் - பிரபா ஒப்பந்தத்தின் மூலம் ஏ-9 பாதை திறக்கப்பட்டது நாட்டுமக்களுக்கோ அல்லது அரசுக்கோ எந்த நன்மையையும் ஏற்படுத்தவில்லை. மாறாக புலிகள் ஆயுதங்களை சேர்க்கவும் தமது இராணுவபலத்தை அதிகரிக்கவும் வழிவகுத்தது.

புலிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தைத் தாக்கினர், ஆனையிறவு படைமுகாமைக் கைப் பற்றியதுடன் ரணில் விக்கிரமசிங்கவை நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றியடையச் செய்து பிரதமராக்கினர். இதற்கு கைமாறாகவே ரணில் - பிரபா ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டது.

இந்தத் தேசத்துரோக ஒப்பந்தம் தொடர்பாக அரசுக்குள்ளேயே மூன்றுவிதமான கருத்துகள் வெளிப்பட்டுள்ளன.

செத்துப்போன ஒப்பந்தம்

அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸவிதாரண இந்த ஒப்பந்தம் அவசியம் என்கின்றார். சிலர் ஒப்பந்தம் செத்துப்போய்விட்டது என்கின்றனர்.

வேறு சிலர் ரத்துச் செய்யப்படவேண்டும் என்கின்றனர். ஒப்பந்தம் இறந்து விட்டதாகக் கூறும்போது ஏன் அந்தச் சடலத்தை அடக்கம் செய்யாமல் பிரேதஅறையில் வைத்துக்கொண்டு மாரடிக்கிறீர்கள்? அதனைப் புதைத்து ஒழிக்க வேண்டியதுதானே.

இந்தத் தேசத்துரோக உடன்படிக்கையை ரத்துச் செய்யும்படி உண்ணாவிரதம் இருக்கிறனர்; ஆர்ப்பாட்டங்களைச் செய்கின்றனர். ஆனால், அரசு கண்டும் காணாமல் இருக்கிறது. அப்படியானால் இந்த அரசும் சமூக விரோதச்செயல்களுக்கு ஆதரவாக செயற்படுகின்றதா? ஒப்பந்தத்தின் காரணமாகவே தென்பகுதியில் சிங்களப் புலிகளும் உருவாகும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, மேலும் காலம் கடத்தாமல் இந்த ஒப்பந்தத்தை உடனடியாக ரத்துச் செய்யவேண்டும். தவறினால் வடக்கு - கிழக்கை பிரிப்பதற்கு நாம் உயர்நீதிமன்றம் சென்றதுபோல் இந்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்வதற்கும் நீதிமன்றம் செல்வோம். அரசு இவ்விடயத்தில் அதன் நிலைப்பாட்டை அறிவிக்கவேண்டும் - என விமல் வீரவன்ஸ கோரிக்கை விடுத்தார்.

பிதமர் பதிலளிப்பார்

விமல் வீரவன்ஸவின் உரைக்கும் அவரது கோரிக்கைக்கும் பதில் அளிக்கும் வகையில் சபை முதல்வர் எழுந்து ''ஜே.வி.பியினரின் கோரிக்கை தொடர்பாக பிரதமர் கூடிய விரைவில் பதிலளிப்பார் என்று கூறினார்.

PERSONAL CLASSES
364,Stanly Rd., Jaffna.
தமிழ்- தர்மராஜா
அரசியல்
பொன். சந்துரு
A/L, G.A.Q., B.A. I, B.A.II
ஆரம்பம் நாளை காலை
8 a.m. 5 p.m. வரை

VCM EXAM - 3 (2007)

இன்று நடைபெறவிருந்த பரீட்சை எதிர் வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறும்.
-பரீட்சை ஒருங்கிணைப்பாளர்கள்.

மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்களின் அன்றாடப் பணிகள் பாதிக்காத வகையில் நடவடிக்கை எடுப்பதாக தளபதி தம்மிடம் கூறியதாக நீதிபதி தெரிவித் தார். (அ-1)

போர்நிறுத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுத்த நிறுத்தத்தைக் கைவிடுமாறு எமக்குப் பல தரப்பிலும் இருந்து கூறப்படுகிறது. நிலைமைகளை ஆராய்ந்து இது பற்றிய அரசின் முடிவை சில தினங்களில் வெளியிடுவோம் - என்றார் அவர்.

(உ - 02)

பிக்குகள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்தின் இறுதியில் - ஐந்து வருடங்களாக நடைமுறையில் இருக்கும் - மக்களுக்கு எதிரான - போர்நிறுத்த உடன்படிக்கையினை உடனடியாக ரத்துச்செய்யவேண்டும் என்று பிரகடனம் வாசிக்கப்பட்டது. ஜே. வி.பி. பிரசார செயலாளர் விமல் வீரவன்ஸவும் இதில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

(த-09)

தெல்லிப்பழையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பழையில் உள்ள புனர்வாழ்வு நிலையத்தில் தங்கவைத்துப் பராமரிக்குமாறு பிரதம நீதியரசர் சரத் என் சில்வா புனர்வாழ்வு ஆணை யாளர் சுகத் கம்லத்துக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

யாழ்.நீதிமன்றத்தில் இது தொடர்பான வழக்குகள் நேற்று யாழ்.நீதிபதி இ.த.விக்ன ராஜா முன் எடுக்கப்பட்டது.

யாழ்.பொலிஸ் நிலைய குற்றத் தடுப் புப் பிரிவு பொறுப்பதிகாரி சார்பில் சப் இன்ஸ்பெக்டர் ஜெயவர்த்தன கடிதம் ஒன் றைச்சமர்ப்பித்து விண்ணப்பம் ஒன்றைத் தாக்கல் செய்தார்.

சரண் அடைந்தவர்கள் தொடர்பாக தெல்லிப்பழையில் புனர்வாழ்வு நிலையம் ஒன்றை அமைக்க ஆயத்தம் செய்யப்பட்டது. தற்போதுள்ள நிலைமையில் இந்த நிலையத்தை இயக்குவதற்குப் போதிய பாது காப்பு வழங்கமுடியாதுள்ளது என யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி யாழ்.பொலிஸ் அத்தியட்சகருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கிறார். இந்த விடயத்தை புனர்வாழ்வு ஆணையாளருக்குத் தெரியப்படுத்தியுள்ளோம்.

எனவே, யாழ்.சிறைச்சாலையில், உயிர் பாதுகாப்புக் கருதி தடுத்துவைக்கப்பட்டுள்ள 40 பேரையும் யாழ்.மாவட்டத்துக்கு வெளியே, பல்லேகல புனர்வாழ்வு முகாமுக்கோ அல்லது வேறு முகாமுக்கோ அனுப்ப உத்தரவு வழங்கவேண்டும் - என்று அந்த விண்ணப்பத்தில் பொலிஸ் தரப்பில் கோரப்பட்டது.

இந்த விண்ணப்பம் தொடர்பாக பிரதம நீதியரசரின் கவனத்துக்கு யாழ்.நீதிபதி கொண்டுவந்தார்.

இந்த விடயம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலருடன் தாம் தொடர்பு கொண்டு பேசியுள்ளதாகவும் -

அவர் இது தொடர்பான முடிவை எடுப் பார் என்றும் - பிரதம நீதியரசர் யாழ்.நீதிபதிக்கு அறிவித்துள்ளார்.

பிரதமநீதியரசரின்அறிவுறுத்தல் கிடைக் கும் வரை யாழ்.பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவுப் பொறுப்பதிகாரியின் மனு மீது எந்தவித உத்தரவும் பிறப்பிக்க முடியாது என்று நீதிவான் தெரிவித்தார். (அ-1)

வவுனியாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தியாகராஜா மகேந்திரராஜா என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் வவுனியா குளுமாட்டுச்சந்தியில் உள்ள தாஸ் கோட்டத்தில் வசித்துவருபவர் என்று பொலிஸாருக்கு அவரின் மனைவி தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் இடம்பெற்ற இடத்திலேயே அண்மையில் இராணுவக் கப்டன் தர அதிகாரி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏனைய இரு சடலங்களும் வவுனியா மாமடு, இராசேந்திரகுளம் ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டன. அச்சடலங்கள் உடனடியாக அடையாளம் காணப்படவில்லை. (ஜ-312)

திருகோணமலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர் சின்னதாசன் தேவபாலன் (வயது 58) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட குடும்பஸ்தர் பொற்கேணிப் பகுதியிலுள்ள வீதி ஒன்றில் நடந்து சென்று கொண்டிருந்த வேளை மோட்டார்சைக்கிளில் வந்த இனம்தெரியாத ஆயுததாரிகள் இவரை சுட்டுவிட்டு தப்பிச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை - உப்புவெளி - காந்திநகர்ப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் பெண் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொலை செய்யப் பட்டுள்ளார்.39 வயதான இந்தப் பெண்ணை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத ஆயுத தாரிகள் சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவத்தில் காயமடைந்த பெண் திருகோணமலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் அங்கு உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இந்தப்பெண் உடனடியாக அடையாளம் காணப்படவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை -

திருகோணமலை - ஐமாலியா பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற மற்றுமொரு சம்பவத்தில் ஓட்டோசாரதி ஒருவரும் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொலை செய்யப்பட்டிருக்கிறார். இவர் யார் என்று அடையாளம் காணப்படவில்லை. (ஐ-3)

மரண அறிவித்தல்கள்

கதிரவேல் பரமானந்தன்

வதிரி மேற்கு, சட்டம்பியார் வளவைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேல் பரமானந்தன் 21.02.2007 புதன்கிழமை அகாலமரணமானார்

அன்னார் முன்னாள் பொலீஸ் உத்தியோகத்தரும் ஓய்வுபெற்ற தேசிய சேமிப்பு வங்கி பாதுகாவலரும் காலஞ்சென்ற கதிரவேல் நல்லம்மா ஆகியோரின் அன்பு மகனும் சங்காவதி செல்வராசா (துறைமுக அதிகார சபை, பருத்தித்துறை), விவேகானந்தன், சச்சிதானந்தன் (CTB கோண்டாவில்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சாந்தியின் அன்புக் கணவரும் நிதர்சன், நந்தினி,குமுதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் டாக்டர் பாலகிருஷ்ணன்,ரவீந்திராதேவி தவமணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (22.02.2007) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் திருகோணமலையில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சட்டம்பியார் வளவு,
கரவெட்டி வடக்கு, கரவெட்டி. (சி-52087)

தகவல் :
குடும்பத்தினர்.

திருமதி இராஜலக்சுமி சபாநாயகம்

(முன்னாள் ஆசிரியர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை)

சாவகச்சேரி, சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும் கனடா வன்கூவரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜலக்சுமி 21.02.2007 புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாநாயகத்தின் (நீர்ப்பாசனத் திணைக்கள படவரைஞர்) அன்பு மனைவியும் உமாதேவி, வாசுதேவன், கருணாகரன், குகபாலன், வரதராஜன், சிவநேசன், துளசிதாசன், கதிர்மணி ஆகியோரின் அன்புத் தாயும் பரமவம்ச, பாஸ்கரி, குலதேவி, சத்தியபாமா, சந்திரவதனி, புஸ்பகலா, குமுதினி, குமணன் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான குமாரதாசன், யோகேஸ்வரன், நடராஜா, சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் தினேஸ், ஸ்ரெபான், மிதிலா, மிதிஷா, ஜனனி, சியாம், சோபிதன், சஜிவன், சாருஜன், கோகுலன், ராகுலன், கபிலன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

C - 3 அண்டர்சன் தொடர்மாடி,
நாரம்பிட்டிய, கொழும்பு - 05.
தொலைபேசி : 011 2502702

தகவல் : (58408)
திரு.திருமதி பரமவம்ச

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறு[illegible]361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.02.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.